சார்பு நீதிமன்றம், மேலூர்

முன்னிலை:- திருமதி.அ.பர்சாத் பேகம், பி.ஏ.,எம்.எல்.,

சார்பு நீதிமன்ற நீதிபதி

2020ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 10ம் நாள் புதன்கிழமை

**அசல்வழக்கு எண்.17/2019**

**1.மைனர் பிரவீன் பாண்டியன்

2.திருமதி.மாலாதி

3.பி.எம்.ஜெகதீஷ் பாண்டியன்

(மைனர் 1ம்வாதி அவரின் தாயார் மற்றும் பாதுகாவலர் 2ம்வாதியின் மூலம்)

...வாதிகள்

**-எதிரிடை-**

*1.பி.எம்.ராஜா பூசாரி (இறப்பு)
2.ரா.ரெபல்லோ
3.ரா.சரவணன்
4.பி.எம்.செல்லப்பாண்டியன்
5.செ.மருதுபாண்டியன்
6.பி.எம்.பாண்டியராஜன்
7.பி.எம்.இந்திரா
8.வி.கே.பாண்டியன்
9.கே.ரமேஷ்பூசாரி
10.கே.பொன்னன் பூசாரி
11.எஸ்.கார்த்திக்
12.பி.சிவாஜி பூசாரி
13.பி.மணிகண்டன்
14.மைனர்.பெ.வீரமலை
15.பெ.ஜெயா
16.மைனர்.சமயன்
17.மைனர்.சங்கர்
18.பூங்கொடி
19. இணை ஆணையாளர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, மதுரை
*20.லட்சம்
**"**21.பி.எம்.வீரபாண்டியன்"**
**"**22.தனம் அம்மாள்"**

...பிரதிவாதிகள்

*Amended as per order in I.A.No.61/2017 dated 10.02.2017
**Amended as per order in I.A.No.49/2018 dated 21.02.2018

இந்த வழக்கானது என் முன்பாக 10.11.2020 அன்று விசாரணைக்காக வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.பிரபுராஜதுரை அவர்கள் முன்னிலையாகியும், 2வது பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் ஜெயமோகன் ஆஜராகியும், 1,16 மற்றும் 21வது பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையில் இறந்துபோன 21வது பிரதிவாதிக்காக வாரிசு சேர்க்க வாதி தரப்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

வாதி அழைத்தும் ஆஜர் இல்லை. எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாத நிலையில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

## தீர்ப்புரை

பெரியணன் என்ற மகாமுனி பூசாரி 16.08.1985ம் தேதியில் எழுதி வைத்துள்ள உயிலின்படி சரோஜா அம்மாள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பூஜை வாரத்தை அவரது ஆயுளுக்குப் பின் ராஜா*(இறப்பு), செல்லப்பாண்டியன், பொற்கைபாண்டியன், ஜெகதீஷ்பாண்டியன், பாபு பாண்டியன், பாண்டிராஜன் ஆகியோர்களுக்கு அவரது வாரிசுகளும் வரிசைக் கிரமப்படி சுழற்சி முறையில் அடைந்து அனுபவித்துக்கொள்ள பாத்தியம் உள்ளது என்றும், பொற்கைபாண்டியன் இறந்துவிட்டதால் அவரது மகன் பிரவீன்பாண்டியன் அவருக்குள்ள உரிமையை அடைந்தும், இந்த வாதிகள் மற்றும் ஜெகதீஷ்பாண்டியன் மற்றும் பிரவின்பாண்டியன் ஆகியோர்கள் சரோஜா அம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட வாரங்களில் அடுத்தடுத்து இரண்டு வாரங்கள் தொடர்ந்து பூஜை வாரத்தை அடைந்து அதன் பலன்களை அடைந்துகொள்ள உரிமையுள்ளது என்று விளம்புகை செய்தும் அதனைத் தொடர்ந்து இந்த வாதிகள் சரோஜா அம்மாள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாரத்தில் இந்த வாதிகள் அனுபவம் செய்வதில் இந்த பிரதிவாதிகளோ, அவர்களது ஏஜெண்ட்டுகளோ, அவர்கள் மூலம் உரிமை கொண்டிருக்கின்றவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், மதுரை 2வது சார்பு நீதிமன்றம் அசல் வழக்கு எண்.257/2007ல் ஏற்பட்டுள்ள 20.06.2007ம் தேதிய சமரசமும் சமரச தீர்ப்பும், தீர்ப்பாணையும் சட்டபடிக்கு செல்லாது என்றும் அது இந்த வாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் இந்த வாதிகளின் உரிமையை எவ்விதத்திலும் பாதிக்காது என்று விளம்புகை செய்தும், அதன்படிக்கு அந்த தீர்ப்பும் தீர்ப்பாணையும் ரத்து செய்தும், அசல் வழக்கு எண் 257/2007ன் சமரச தீர்ப்பின் அடிப்படையில் ரெபல்லோ என்பவரோ அவரது ஏஜெண்டுகளோ, வாரிசுகளோ, அவர் மூலம் உரிமை கொண்டாடுபவர்களோ சரோஜா அம்மாள் வாரத்தில் உரிமை கொண்டாடி டிரஸ்டி என்று கூறி கோவில் நிர்வாகத்தில் பங்கேற்கவோ இந்த வாதியின் உரிமையில் இடையூறு செய்யவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், 2ம் பிரதிவாதி ரெபல்லோ சரோஜா அம்மாள் வார உரிமையை தனக்கு பாத்தியம் என்று கூறவோ, அதன் அடிப்படையில் டிரஸ்டி பாத்தியம் உரிமை கேட்பதற்கோ, உரிமையில்லை என்று விளம்புகை செய்தும் அதனைத் தொடர்ந்து ரெபல்லோ மற்றும் அவரது ஏஜெண்டுகள், வாரிசுதாரர்கள் அவர் மூலம் உரிமை கொண்டாடுபவர்களோ சரோஜா அம்மாள் வாரத்தில் கோவில் நிர்வாகத்தில் இடையூறு செய்யவோ, பூஜை காரியங்களை தடை செய்யவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இந்த பிரதிவாதிகளோ, அவர்களது ஏஜெண்டுகளோ, வாரிசுகளோ அவர்கள் மூலம் உரிமை கொண்டாடுபவர்களோ, 1-ம் வாதி மைனர் பிரவீண் பாண்டியன், 3-ம் வாதி பி.எம்.ஜெகதீஷ்பாண்டியன் ஆகியோர் சரோஜா அம்மாள் வாரத்தில் நிர்வாகம் மற்றும் பூஜை உரிமைகள் அடைந்து அனுபவிப்பதில் எவ்வித இடையூறும் தடங்கலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும், இந்த

பிரதிவாதிகள் வழக்கின் செலவு தொகையை வாதிகளுக்கு கொடுக்கும்படிக்கு உத்தரவு பிறப்பித்தும், இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை குறித்து தரப்பினர்களுக்கு சட்டபடிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்களை வழங்கி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கும்படி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இறந்துபோன 21வது பிரதிவாதிக்காக வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. வாதி அழைத்தும் ஆஜர் இல்லை. எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. அசல் வழக்கு பல வருடங்களாக எவ்வித முன்னேற்றமும் இன்றி நிலுவையில் இருந்து வருகிறது. ஊரடங்கு உத்தரவில் இருந்தே வாதி வழக்கை தொடர்ந்து நடத்த ஆர்வம் காட்டவில்லை. எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. இதை அனைத்தையும் கருத்தில் எடுத்துக்கொண்டு, வாதி அழைத்தும் ஆஜர் இல்லை, எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாத நிலையில் இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2020ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்:-A.பர்சாத் பேகம்

சார்பு நீதிபதி
மேலூர்